உ

முருகர் துணை.

எட்டிகுடி வடிவேலர்பேரில்

# தங்கச் சிந்து.



சென்னை சூளை

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1923.

34, ஆண்டியப்ப நாய்க்கன் தெரு, சூளை மதராஸ்.

முருகர் துணை.

# தங்கச் சிந்து.

காப்பு.

விண்ணவர் பணிந்துபோற்றும்
விஜயநன் பதியின்மேவும்
வண்ணமா யூரவீர
வரததண்டா யுதன்மேல்
திண்ணமாய் தங்கச்சிந்தைச்
செப்பியெந் நாளும்போற்ற
விண்ணெலாம் பரவுமோன
வேழமா முகன் காப்பாமே.

இ-ம்-காப்பி-தாளம்-ஆதி-கண்ணிகள்.

ஓம்நமசிவாயனடி உற்பனவுபாயனடி
தாமரசபாதனடி ஞானத்தங்கம்
தத்துவபோதனடி 1

எட்டிகுடிவேலனடி யெங்கள்முருகேசனடி
அஷ்டதிக்கெங்கும்பரவி ஞானத்தங்கம்
அடியாரைக்காப்பவண்டி 2

தணிகைமுருகேசனடி தற்பரவுல்லாசனடி
பணிபவர்தன்னேசனடி ஞானத்தங்கம்
பன்னிருகைவேலன்டி 3

வேலின்முதல்வனடி வித்தகன்புதல்வனடி
மாலின்மருகனடி ஞானத்தங்கம்
மந்திரமுருகனடி 4

சங்கரன்பாலனடி சாமிகுருசீலனடி
துங்கமறைமூலனடி ஞானத்தங்கம்
சூரர்குலகாலனடி 5

வீராதிவீரனடி விஜயகெம்பீரனடி
தீராதிதீரனடி ஞானத்தங்கம்
வெண்குமரவேலனடி 6

வரைமீதுவாசனடி மங்களவுல்லாசனடி
துரைராஜராஜனடி ஞானத்தங்கம்
தூயகுமரேசனடி 7

கார்த்திகைகுமாரனடி காரணவிஸ்தாரனடி
பார்த்திபசிங்காரனடி ஞானத்தங்கம்
பார்புகழ்செந்தூரனடி 8

கௌரிதன்மைந்தனடி கவிவலர்சொந்தனடி
மௌலிகொள்கந்தனடி ஞானத்தங்கம்
மந்திரவானந்தனடி 9

சடாக்ஷரத்தையனடி சாமிமுருகையனடி
கடாக்ஷிக்குமெய்யனடி ஞானத்தங்கம்
கலையுணர்துய்யனடி 10

சண்டப்பிரசண்டனடி சௌரியவுத்தண்டனடி
தொண்டர்க்குநேசனடி ஞானத்தங்கம்
துய்யஜெகதீசனடி 11

பாண்டரங்கன்பாலனடி பார்புகழ்விசாலனடி
வேண்டுகின்றோர்துன்பமெல்லாம் ஞானத்தங்கம்
விலக்கும்பிரதாபனடி 12

கன்னியுமைபாலனடி காரணவிசாலனடி
சென்னிமலைவேலனடி ஞானத்தங்கம்
திவ்வியமனுகூலனடி 13

கோசலைதன்பேரனடி கோலமயில்வீரனடி
வாசவன்மருகனடி ஞானத்தங்கம்
வடிவேல்முருகனடி 14

மாமோனதீபனடி வாசமலர்நீபனடி
தாமோதரன்றனக்கு ஞானத்தங்கம்
தான்மருகனானோனடி 15

சத்துருசங்காரனடி சாமிகுமாரனடி
சித்திரமயில்வீரனடி ஞானத்தங்கம்
செந்தமிழ்க்குதாரனடி 16

இரம்பைமுதலோர்நடிக்க நாரதரிசைபடிக்க
உம்பர்தொழவீற்றிருக்கும் ஞானத்தங்கம்
ஒயில்முருகேசனடி 17

அத்வைதபோதனடி அசுரவினோதனடி
தத்துவபரிசுத்தனடி ஞானத்தங்கம்
சற்குணப்பிரசித்தனடி 18

மாமௌனயோகிகட்கு மந்திரவடிவாய்விளங்குஞ்
சோமமுகநேமனடி ஞானத்தங்கம்
சுரலோகபூபனடி 19

ஞானமுழுதும்படைத்த நாதாந்தபோதனடி
கோலமயில்வாகனடி ஞானத்தங்கம்
குறவள்ளிமோகனடி 20

அண்ணாமலைநாதரிடத் தன்பினொடுவீற்றிருக்கும்
உண்ணாமுலைமைந்தனடி ஞானத்தங்கம்
உச்சிதசுகந்தனடி 21
வீரவாகுமுன்னுதித்த வேதாந்தமூர்த்தியடி
காரணவினோதனடி ஞானத்தங்கம்
கலைக்ஞானபோதனடி 22
சுந்தரமிகுந்துலவுங் காரணசிவகயில
சுந்தரதயாளனடி ஞானத்தங்கம்
தொண்டர்பணிதாளனடி 23
மண்டலமளந்ததிரு மாலின்மருகனடி
கொண்டல்பணிவேலனடி ஞானத்தங்கம்
சுப்ரமண்யலோலனடி 24
சண்மதஸ்தரெல்லோருந் தாள்பணியும்நாதனடி
வண்மைமிகுதீரனடி ஞானத்தங்கம்
வாலகுருபோதனடி 25
மரகதவஜ்ராபரண மார்பப்ரதாபனடி
துரகதமயூரனடி ஞானத்தங்கம்
துஷ்டர்கட்குத்தூரனடி 26
முப்புரமெரித்ததிரு முக்கணார்தமக்கு
செப்புகுருராயனடி ஞானத்தங்கம்
திவ்வியகளிவாபனடி 27
கொண்டலுலவுமெட்டிக் குன்றில்வளர்கந்தனடி
அண்டருக்கதீபனடி ஞானத்தங்கம்
அற்புதமயூரனடி 28

அன்பருக்கன்பனடி ஆதிசுப்ரமண்யனடி
வன்பருக்கதீபனடி ஞானத்தங்கம்
வடிவேல்ப்ரதாபனடி 29

திருப்பரங்குன்றமதிற் சின்மயசொரூபமதாய்
விருப்புறுநாதனடி ஞானத்தங்கம்
வேதமனுநீதனடி 30

குன்றுதோறும்வாழ்பவனடி குறமகள்பாகனடி
என்றுமனுகூலனடி ஞானத்தங்கம்
ஏகாந்தலோலனடி 31

வாலையுமைகண்ணியாய் வந்துமுருகேசனடி
சோலைமலைவாசனடி ஞானத்தங்கம்
சோதிப்ரகாசனடி 32

தேவரிடரைத்தவிர்க்கும் தெய்வானைவேலனடி
காவலனெனைக்காக்க ஞானத்தங்கம்
கருணைப்ரவாகனடி 33

தேவேந்திரன்பூசைசெய்யுந் தேவாதிதேவனடி
பார்வேந்தர்தான்புகழும் ஞானத்தங்கம்
பன்னிருகைவேலனடி 34

ஆவினன்குடியில்வளர் அற்புதவைபோகனடி
பூவினன்பணிந்துபுகழ் ஞானத்தங்கம்
போதகுருநாதனடி 35

தாகமுனிதுதிக்குங் காரணசொரூபனடி
சுரானுகூலனடி ஞானத்தங்கம்
சுப்ரமண்யவேலனடி 36

மேலோர்மனத்திலுறை மேன்மைப்ரதாபனடி
சாலோகமானவர்க்கு ஞானத்தங்கம்
தந்திடுதயாளனடி 37

அஷ்டதிசைகளினு மன்பர்தமதுமன
திஷ்டமெலாமுடிக்கும் ஞானத்தங்கம்
திவ்யப்ரதாபனடி 38

திருக்கழுக்குன்றிலுறை திவ்யஜெகதீசருக்கு
குருக்களெனவேவந்த ஞானத்தங்கம்
குமரகுருபோதனடி 39

வேள்விமலைதனிலே வேங்கைமரமானவண்டி
கேள்விமறையோர்துதிக்கும் ஞானத்தங்கம்
கீர்த்திப்ரதாபனடி 40

நற்கீரதேவனுக்கு ஞானமதிற்காசிநதி
முதற்காலமாக்கியருள் ஞானத்தங்கம்
மோகனகெம்பீரனடி 41

அண்டபுவனமெங்குநின் றுதரிக்கும்மூர்த்தியடி
வண்டனிடம்பனடி ஞானத்தங்கம்
வாலசுப்ரமண்யனடி 42

மூலாதாரப்பொருளாய் மோனகுருவாய்விளங்கும்
வேலாயுதக்கடவுள் ஞானத்தங்கம்
வேதாந்தமூர்த்தியடி 43

மோனகுருபரனும் முத்திதரும்நாதனடி
ஞானவடிவாகவளர் ஞானத்தங்கம்
நாதாந்ததீரனடி 44

தில்லைநடராஜருக்கு சேயாகவந்துதொண்டர்
அல்லலெல்லாந்தீர்த்தவண்டி ஞானத்தங்கம்
ஐயன் காங்கேயனடி 45

சாகரந்தனிற்சேலாய்த் தானுதித்தமூர்த்தியடி
மோகனவள்ளிதன்னை ஞானத்தங்கம்
முத்தமிடுங்கர்த்தனடி 46

அஷ்டதிக்குப்பாலகரும் அன்பொடுதினம்பணியச்
சட்டஞ்செலுத்துகின்ற ஞானத்தங்கம்
சண்முகவேலனடி 47

சத்தகோடிமந்திரமுந் தானும்புனிதனடி
எத்திசையுங்கீர்த்திபெற்ற ஞானத்தங்கம்
எங்கள்முருகேசனடி 48

கின்னரர்வித்தியாப்ரசங் கீதங்கள்பாடுஞ்சபை
மன்னவனானவண்டி ஞானத்தங்கம்
மயில்முருகேசனடி 49

வேலவர்க்குந்தொண்டவனாய் விளங்குஞ்சோலைமுத்
ஆவலாய்க்கார்க்கவேணும் ஞானத்தங்கம் [தை
அருள்வேலர்கந்தனடி 50

மௌனகுருருத்ரமூர்த்தி மதுரகவிக்கருளும்
புனிதமுருகனடி ஞானத்தங்கம்
போதகுருநாதனடி 51

தங்கச்சிந்து முற்றிற்று.